**செய்தி வெளியீடு எண் : 490** **நாள் : 08.03.2023**

**கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, இரயில்வே மேம்பாலப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (8.03.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 3 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, 1 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 61.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் 61.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வில்லிவாக்கம் சந்திக்கடவு எண்.1–க்கு மாற்றாக வடக்கில் கொளத்தூர் பிரதான சாலையையும் தெற்கில் ஐ.சி.எப். சாலையையும் இணைக்கும் வண்ணம் புதியதாக கட்டப்பட்டு வரும் மேம்பாலப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், வில்லிவாக்கம் மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியில் 1.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபாதை, சிறுவர் விளையாட்டுத் திடல், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், குடிநீர் வசதி, மரம், செடி மற்றும் புல்வெளி அமைத்தல், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையிலான கழிப்பறை, மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு, கண்காணிப்பு கேமராக்கள் ஆகிய வசதிகளுடன் புதியதாக அமைக்கப்படவுள்ள பூங்காவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, கொளத்தூர் 65–வது வார்டுக்குட்பட்ட பூம்புகார் நகர் 28வது தெருவில் 69.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவீதியம்மன் கோயில் குளத்தினை தூர்வாரி, அங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு வசதி, நடைபாதை, யோகா மேடை மற்றும் திறந்தவெளி ஆண்கள் உடற்பயிற்சி மையம் ஆகியவற்றை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

பின்னர், மழைக்காலங்களில் வீனஸ் நகர் மற்றும் செல்வி நகர் பகுதிகளில் நீர்தேங்கா வண்ணம் 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு மழைநீர் வெளியேற்றும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மழைநீர் வெளியேற்று நிலையமும் தலா 1.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு மழைநீர் தேங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. நீரை அகற்ற ஒவ்வொரு தொட்டியிலும் 100 குதிரைத்திறன்

கொண்ட இரண்டு நீர்மூழ்கி மோட்டார்கள் பொருத்தப்பட்டு மோட்டார் அறைகள் கட்டப்பட்டுள்ளது. இப்புதிய இரண்டு நீரேற்று நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, குடியிருப்பு நலச் சங்கத்தினரிடம் நீரேற்று நிலையங்களுக்கான சாவிகளை வழங்கினார்.

முன்னதாக, கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பெறப்பட்ட மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை, பயனாளிகளுக்கு மருத்துவ உதவித்தொகை, திருமண உதவித்தொகை, இஸ்திரி பெட்டிகள், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர ஸ்கூட்டர், காதுகேட்கும் கருவி என 119 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. கலாநிதி வீராசாமி, திரு. ஆர். கிரிராஜன், துணைமேயர் திரு. மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் திரு.ப.ரங்கநாதன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

..........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in